**DEPOSITION ODEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**...**

**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**

**STC No. 401/2024**

Deposition of the witness for **PW3**

Name : சம்சுதீன்
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (16.07.2026)

குறுக்கு விசாரணை

ரவி முமைகதீன் பாட்சா எனக்கு என்ன உறவு என்றால எனது பெரியப்பா மகன் ஆவார். எனது அப்பாவும் அவரது அப்பாவும் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவார். கடையநல்லூரில் A1 சீட்டு நட்த்தி வரும் மைதீன் என்பவ்ா இன்னொரு பெரியப்பாவின் மகன் ஆவார். மைதீன் மகன் பெயர் வாசுமக்ரம் ஆவார். அவர் தன் என்னை இன்று நீதிமன்றத்திற்கு இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. புகார்தாரர் முகைதீன் பாட்சா மீது பல்வேறு சிவில் மற்றும் செங்கோட்டை, தென்காசி நீதிமன்றங்களில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரின் அத்தை பெயர் மும்தாஸ் என்றால் சரிதான். அந்த மும்தாஸ்க்கு காசோலையை முறைகேடாக கையண்டதால் நீதிமன்றத்தில் 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவர் மீது சிறை தண்டடை விதிக்கப்பட்ட விவரம் பல வழக்குகள் நிலுவை யில் உள்ள விவரம் எனக்கு தெரியும். வழக்கிற்காக பொய்யாக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் என்ன வேலை பார்க்கிறார் வருமானம்

எவ்வளவு என்றால் பைக் வியாபாரம் செய்து வருகிறார். அவருக்கு பைக்கை வியாபாரத்தை தவிர வேறு எந்த வருமானமும் கிடையாது என்றால் சரிதான். உறுதிக்கூற்றில் 04.02.2024 ம்தேதி எதிரி மனுதாரரின் வீட்டிற்கு வந்து 4 இலட்சம் பண்தை பெற்று கொண்டதாக கூறியுள்ளதில் அந்த பணத்தை எந்த தேதியில் எதற்காக எதிரி மனுதாரரிடம் கேட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு ரூபாய் 4 இலட்சம் கடன் கொடுத்தார் என்று நான் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. தொகையை பெற்றுக் கொண்டு எதிரி கையொப்பம் செய்வதாக நான் உறுதிக்கூற்றில் சொல்லியிருப்பது பொய் என்றால் காசோலையை எதிரி ரவியிடம் கையொப்பம் போட்டு கொடுத்தார். அதனை ரவி பார்த்து விட்டு முன் பக்கம் போட்டுள்ளீர்கள். பின்பக்கமும் கையொப்பமும் போட்டு கொடுங்கள் என்று எதிரியிடம் கொடுத்தார். அந்த காசோலையின் பின்புறமும் எதிரி கையொப்பம் போட்டு கொடுத்தார். எனது சாட்சியப்படி காசோலையில் முன்பக்கமும், பின்பக்கமும் எதிரி கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். அந்த காசோலை நம்பர் அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தொகை எழுதியிருந்ததா என்றால் எழுதவில்லை. வாய்மூலமாக ரூபாய் 6 இலட்சம் என பேசிக் கொண்டார்கள். என் முன்பாக எதிரி எந்த ரூபாயும் வாங்கவும் இல்லை பணம் வாங்கியதை நான் நேரில் பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மனுதாரர் வீட்டில் நான் பேசிக் கொண்டிருக்கும் போது எதிரி மனுதாரர் வீட்டிற்கு வந்தார் என சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. A1 என்ற பெயரில் சீட்டு நடத்தி வரும் மைதின் என்பவருக்கு 2020 ம் ஆண்டு முன்பக்கம் மட்டும் கையொப்பம் செய்து கொடுத்த இந்த வழக்கு காசோலையை அந்த மைதினிடமிருந்து புகார்தாரர் பெற்று இந்த பொய்யான வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு பொய்யாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு சகோதரர் என்ற முறையில் இந்த புகார்தாரர், நான் மற்றும் A1 மைதின் 3 பேரும் கூட்டு சேர்ந்து எதிரியிடம் இருந்த பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இந்த வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. எனது உறுதிக்கூற்றில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையில்லை என்றால் சரியல்ல. எதிரியை நான் நேரடியாக பார்த்தது இல்லை நீதிமன்றத்தில் பார்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.07.16 21:49:57 +0530

Judicial Magistrate, Shenkottai